Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, JUNE 11, 2024

செவ்வாய்க்கிழமை ஜூன் 11, 2024 | ஒளி: 09 கதிர்: 270 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

போக்குவரத்து அமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர், வேலை நிறுத்தத்தை கைவிட ரயில்வே தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் ரயில் சாரதிகள் தொழிற்சங்கங்களுக்கு இடையில், திங்கட்கிழமை (10) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், தங்களுடைய வேலைநிறுத்த போராட்டத்தை ரயில்வே தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2

# பதவிப்பிரமாணத்திற்கு பின்னர்...

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி, ஞாயிற்றுக்கிழமை (09) மாலை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.
மூன்றாவது தடவையாக பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுள்ளார்.
இந்த பிரதான வைபவத்திற்கு சார்க் நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.
இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.
அதன் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் எடுத்துக் கொண்ட படம்...





## ஒகஸ்டில் மோடி வருகிறார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## முன்பள்ளி ஆசிரியைகளின் கொடுப்பனவு அதிகரிப்பு

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான 2,500 ரூபாய் கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## "கைவாறு அரசியல்வாதிகளின் சீனி உருண்டை அரசியல்"



வடக்கு, கிழக்கு மாகாண மக்களும் பல்வேறு வாய்ச் சொல் தலைவர்களின் சீனி உருண்டை அரசியலுக்கு அடிமைப்பட்டு, தேர்தல் காலங்களில் அவர்கள் தரும் கனவு உலகத்தில் தொலைந்து போகின்றனர். இந்த சீனி உருண்டை அரசியலால் ஏமாற்றப்படும் காலம் முடிவுக்கு வர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "கோமாளிக் கூத்துக்கு எதிராக பிரசாரம்"

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

எஸ்.தில்லைநாதன்

தமிழ் பொதுவேட்பாளர் என்ற கோமாளிக் கூத்துடன் எமக்கு உடன்பாடில்லை. இதற்கெதிராக மக்கள் மத்தியில் இலங்கை தமிழரசு கட்சி பிரசாரம் செய்யும் என

தொடர்ச்சி P2



இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில்

## பயணிகள் படகு சேவை

இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

## "தரமற்ற சவர்க்காரத்தை பயன்படுத்த வேண்டாம்"

தரமற்ற சவர்க்காரங்களைப் பயன்படுத்துவதால் குழந்தைகளின் தோலில் பல்வேறு உபாதைகள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது என அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலை காரணமாக சில பெற்றோர்கள், குழந்தைகளுக்குத் தரமற்ற குழந்தை சவர்க்காரத்தைப் பயன்படுத்துவதாகவும், அதன் விளைவு எதிர்காலத்தில் ஏற்படும் எனவும் சங்கத்தின் பொருளாளர் பிரியங்கனி சுசங்கிகா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழில் சஜித்துடன் கைகோர்த்தார் அங்கஜன்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச கலந்து கொண்ட நிகழ்வில், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டிருந்தார்.

வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் திறன் வகுப்பறை யை உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (10) நடைபெற்றது.



அந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டு, திறன் வகுப்பறையைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## மாடு மேய்த்தவர் நீரில் மூழ்கி மரணம்



எச்.எம்.எம்.பர்ஸான்ரி

திதென்னை குளத்திற்கு அருகில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் குளக்கட்டில் சறுக்கி விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மரணமடைந்த இளைஞனின் சடலத்தை பிரதேச மீனவர்கள் கண்டெடுத்து கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## காணாமல் போன மாணவி சடலமாக மீட்பு



கண்டி- ரெலுகேஸ் இலக்கம் 2 கெல்லாபோக்க மடுல்கலையில் காணாமல் போயிருந்த மாணவியான ஹரிவதனி இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (09) சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி கடந்த வெள்ளிக்கிழமை (07) முதல் காணாமற் போயிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# யாழில் சஜித்துடன் கைகோர்த்தார் அங்கஜன்

நிகழ்வில் கலந்து கொண்டமை தொடர்பில் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையில்,

“மாவட்ட கல்வி அபிவிருத்திக்கான இப்பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தான் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தேன். இதன்போது, எமது மக்களின் கல்வியை மேம்படுத்துவதன் அவசியத்தையும், அதன் இலக்கில் நாம் இருவரும் பயணிப்பதே எமக்கிடையேயான ஓர் ஒற்றுமையாக உள்ளது.

அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் வாக்குறுதி வழங்கியுள்ள நிலையில், அதனை வரவேற்பதுடன் எமது மக்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக அறிந்து கொள்ள வேண்டும், அவ்வாறு செய்யும் பட்சத்தில் அதனை நாம் வரவேற்போம்” என்றார்.

## “கைவாறு...

இப்பிரதேச மக்களின் அரசியல், சிவில் உரிமைகள் மட்டுமன்றி, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் சிறந்த வருமானத்தைப் பெறுவதற்கான உரிமைகளை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 226 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாண மக்கள் பல்வேறு தலைவர்களின் கதைகளை போதுமான அளவு கேட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, மன்னார், முல்லைத்தீவு மக்கள் அந்தக் கதைகளைக் கேட்டு அலுத்துப் போயிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்களுக்கு செயல்வடிவம் கொடுக்குமாறு மக்கள் கேட்கின்றனர். இந்த நடவடிக்கையாக, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவேன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வட மாகாணத்தின் சகல மாவட்டமும் அறிவின் மையங்களாக மாற்றப்படும். பாடசாலை மட்டத்தில் தகவல் தொழில்நுட்பக் கல்வி, ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவோம். மேலும், அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் கல்வி உரிமை உள்ளடக்கப்படும்.

பிள்ளைகளை போதைப்பொருள் அரக்கனின் வலையில் இரையாக்கிக் கொள்ள பல்வேறு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த போதைப்பொருட்களை சமூகத்தில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த போதைப் பொருட்களால் அழியும் பிள்ளைகளைக் காக்க, போதைப்பொருளை சமூகத்திலிருந்து ஒழிக்கும் கொள்கையில் ஐக்கிய மக்கள் சக்தி இருந்து வருகிறது.

கடந்த கால ஆட்சியாளர்கள் அரச அதிகாரத்துடனும், அரச நிதி ஒதுக்கீடுகளின் மூலமே யாழ்ப்பாணத்துக்கு பணிபுரிந்துள்ளனர். அதிகாரம் இல்லாமல் ஐக்கிய மக்கள் சக்தியே யாழ்ப்பாணத்திற்குப் பெறுமதி சேர்த்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக, நாடு முழுவதையும் உள்ளடக்கிய பங்களிப்பை நல்கியுள்ளது. இது மக்கள் எதிர்பார்த்த முறைமையில் மாற்றமாகும்.

ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்புவதாக ஆட்சியாளர்கள் கூறினாலும், அதனை எவ்வாறு முன்னெடுப்பது என்று அரசாங்கம் இன்னும் தெளிவுபடுத்தவில்லை. இது தொடர்பான திட்டங்கள் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளன. ஏனைய அரசியல்வாதிகள் சிங்கள வாக்குகள் மற்றும் தமிழ் வாக்குகளைப் பெறுவது எவ்வாறு என சிந்தித்து செயல்பட்டுவரும் போது, நாட்டில் உள்ள 10,099 பாடசாலைகளில் பயிலும் சுமார் 41 இலட்சம் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து நான் சிந்தித்து செயற்பட்டு வருகின்றேன். இதன் பிரதிபலனாகவே இந்த பிரபஞ்சம் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## காணாமல் போன...

முறைப்பாட்டுக்கு அமைய அவரை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மாணவியின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கண்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மாடு மேய்த்தவர்...

இவ்வாறு மரணமடைந்த இளைஞன் வாழைச்சேனை, ரிதிதென்ன புதிய கிராமம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சாலி முகம்மது றிஹாஸ் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வேலைநிறுத்தம்...

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு தாமதம், ஆட்சேர்ப்பு தாமதம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, குறித்த வேலை நிறுத்தம் கடந்த நான்கு நாட்களாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால், ரயில் பயணிகள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

## முன்பள்ளி...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய முன்பள்ளி ஆசிரியைகளின் கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் முன்பள்ளி ஆசிரியப் பணியில் சுமார் 34,000 பேர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் படகு சேவை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவிப் பிரமாண வைபவத்திற்காக புதுடெல்லி சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை திங்கட்கிழமை (10) காலை நடைபெற்றது. இதன்போதே பங்களாதேஷ் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு முறையின் அடிப்படையில் பங்களாதேஷில் செயற்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆராய்ந்து இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கை விவசாயத்துறை நிபுணர்கள் குழுவொன்றை பங்களாதேஷிற்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.

பங்களாதேஷிற்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்தும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடியதோடு, இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர் பங்களாதேஷுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை மேற்கொள்வது குறித்தும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, பங்களாதேஷில் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்தார். மாநாடு நடைபெறும் காலப்பகுதி இலங்கையில் தேர்தல் நடைபெற இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் பங்களாதேஷுக்கு விஜயம் செய்வதாகவும் பங்களாதேஷ் பிரதமரிடம் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைக்க முடிந்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார்.

பொருளாதார மீட்சிக்கு பங்களாதேஷ் மற்றும் இந்தியாவிலிருந்து கிடைத்த ஆதரவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

## “தரமற்ற...

“இன்றைய நாட்களில் குழந்தைகளின் உடலில் சில ஒவ்வாமைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதை ஆராய்ந்தபோது, தரமில்லாத குழந்தை சவர்க்காரத்தைப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது.

தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு சவர்க்காரத்தை பயன்படுத்தும்போது கவனமாக இருக்க வேண்டும். இதன் பாதிப்பு நீண்ட காலத்துக்குப் பின்னரே வெளிப்படும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஓகஸ்டில் மோடி....

பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ராஷ்டிரபதி பவனில் மோடியை ஞாயிற்றுக்கிழமை(10) சந்தித்துப் பேசியபோது, இலங்கைக்கு வருமாறு மோடிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் பிரதமர் மோடியின் பயணம் குறித்து விக்ரமசிங்க புதுடெல்லியில் திங்கட்கிழமை (10) கலந்துரையாடினார்.

ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இருவரும் இந்தியத் தலைவரின் விஜயம் குறித்து கலந்துரையாடினர், இதன்போது இந்த விஜயம் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெறும் என தெரியவந்துள்ளது. ஜெய்சங்கர், விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வதாகவும், இந்தியப் பிரதமரின் பயணம் குறித்து ஆராய்வதாகவும் ஜனாதிபதி விக்ரமசிங்கவிடம் உறுதியளித்திருந்தார்.

## “கோமாளிக் கூத்துக்கு...

அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். சுமந்திரன் தரப்பினரின் ஏற்பாட்டில் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் “ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்” என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை (09) நடத்தப்பட்ட அரசியல் கருத்துக் களத்தில் உரையாற்றியபோதே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

“பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே, அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும். சிவில் சமூகக்குழுக்கள் ஏதாவது ஆலோசனை சொல்லலாமே தவிர, அரசியல் முடிவுகள் எடுப்பதற்கான மக்கள் ஆணையை பெறாதவர்கள் என்றார்.

சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா, செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், சமத்துவ கட்சியின் தலைவர் மு. ஸ்ரீசந்திரகுமார், இமானுவல் அடிகளார், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை என பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

## ‘மாமியா’ கைது

கைத்துப்பாக்கியை வைத்திருந்த நபர் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் திங்கட்கிழமை (10) கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் சீதுவை வடக்கில் வசிக்கும் 34 வயதுடைய ‘மாமியா’ என அழைக்கப்படும் நபர் ஆவார்.

இந்த கைத்துப்பாக்கியானது எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டதென இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஈர நிலங்களை அழிப்பதை கட்டுப்படுத்த புதிய சட்டம்

சட்டவிரோத கட்டுமானங்களை அழிப்பது, ஈர நிலங்களை அழிப்பது உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் இயற்றப்பட உள்ளன. அதற்காக அனைத்து அரச நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா தெரிவித்தார்.

ஈர நிலங்களைப் பாதுகாத்தல், அதனுடன் தொடர்புடைய பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழலில் சமநிலையை உருவாக்குதல் போன்றவற்றுக்கு முன்மாதிரி நாடாக இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து அறிவையும் சேகரித்து ஒரு திட்டத்தைத் தயாரிப்பதே இந்த பொதுவான ஒருமித்த கருத்து. சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் உலகளாவிய சவால்களுக்கு இந்த கொள்கைகளை ஒரு முன்மாதிரி நாடாக செயல்படுத்துவது எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சின் செயலாளர் கூறினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த அரசாங்க தகவல் திணைக்களத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச ஈரநிலப் பூங்கா பங்களிப்புடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசியாவின் முதல் மாநாடு குறித்து தெரிவிக்க இந்த செய்தியாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இதை ஏற்பாடு செய்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள 15 நாடுகளில் உள்ள 70க்கும் மேற்பட்ட ஈர நிலப் பூங்காக்களிலிருந்து கிட்டத்தட்ட 100 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இலங்கை, கொரியா, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியான்மார், நியூசிலாந்து, நேபாளம், ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்வான், இங்கிலாந்து ஆகிய 15 நாடுகள் மாநாட்டில் பங்கேற்கின்றன. “சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்” என்பது இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருளாகும். ஈர நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மாநாட்டின் நோக்கமாகும்.

## சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, கல்வி அமைச்சில் திங்கட்கிழமை (10) கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்றது.

## அருட்தந்தையை சந்தித்தார் சஜித்

யாழ்ப்பாணம் ரோமன் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் அருட்தந்தை ஜோசப் பத்திநாதர் ஜெபரத்தினம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பொன்று யாழ். ஆயர் இல்லத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.



# காத்திருந்தவர் கைது; வீட்டார் தப்பியோட்டம்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு, தனது குடும்பத்தினருடன் வருகை தந்த நபர் ஒருவர் அரியாலை பகுதியில், நாள் வாடகைக்கு வீடொன்றை பெற்று தங்கியுள்ளார்.

குறித்த நபர் சனிக்கிழமை (09) அன்று திருநெல்வேலி சந்தைக்கு அண்மித்த பகுதியில், போலி நாணய தாள்களை அச்சிடும் இயந்திரம் மற்றும் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு பயன்படும் தாள்களை நபர் ஒருவருக்கு விற்பனை செய்யும் நோக்கில் காத்திருந்துள்ளார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து அவரிடம் இருந்த பொருட்களை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர் குடும்பத்துடன் அரியாலையில் தங்கியிருப்பது தெரிய வந்ததையடுத்து, குறித்த வீட்டுக்கு பொலிஸ் குழு சென்றுள்ளனர். அப்போது வீட்டில் இருந்தவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

# வேலையற்ற பட்டதாரிகளை யாழில் சந்தித்தார் சஜித்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சந்தித்து கலந்துரையாடியதுடன், பாராளுமன்றில் குறித்த விடயம் தொடர்பாக பேசுவதாகவும் வாக்குறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக திங்கட்கிழமை (10) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, போராட்டகாரர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, "எமது ஆட்சி உருவாகும்போது கல்வித்துறையில் சீர்திருத்தம் கொண்டுவருவதாகவும், மாற்றுத் திறனாளி பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்" என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமாச் சந்திரபிரகாஷ் உள்ளிட்ட அமைப்பாளர்களும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நண்பனின் மனைவியை வன்புணர்ந்தவர் கைது

20 வயதுடைய திருமணமான பெண்ணொருவரை, கணவனின் நண்பர் ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ள சம்பவம் மொனராகலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கரடுகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிடகும்புர - தெல்கொல்ல பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணே இவ்வாறு கடந்த 07ஆம் திகதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண், அவரது கணவன், கணவனின் சகோதரர் மற்றும் கணவனின் தாய் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வருகின்றார்.

சம்பவத்தன்று கணவனின் தாய் அருகில் உள்ள வீடொன்றில் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த நிலையில், அவரது மனைவி சுகவீனம் காரணமாக உறங்கிக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது கணவர் தனது சகோதரர் மற்றும் மூன்று நண்பர்களுடன் வீட்டில் மது அருந்தியுள்ளார்.

மது அருந்தியவர்கள் சிறிது நேரம் வீட்டை விட்டு வெளியேறி விட்டனர். அவர்களுடன் கணவனும் சென்று விட்டார். நண்பர்களில் ஒருவர் மட்டும் வீட்டில் நின்று விட்டார். அப்போது, அந்த பெண் உறங்கிக்கொண்டிருந்த அறைக்கு வந்து வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுத்தியுள்ளார்.

எனினும், கடந்த 9 ஆம் திகதின்று வீட்டுக்கு திரும்பி வந்த அந்த சந்தேகநபர், நடந்த சம்பவத்தை யாரிடமாவது கூறினால் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார்.

எனினும், தனக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பில், கணவரிடம் தெரிவித்ததையடுத்து, இருவரும் கடந்த (09) கரடுகலை பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவரான பஹலபிட்டிய ரப்பர்வத்தை நாகல பிபில பிரதேசத்தை சேர்ந்த 32 வயதானவரை கைது செய்துள்ளனர்.




## கிழக்கு பல்கலைக்கழகத்தில்
# சர்வதேச ஆய்வு மாநாடு

வவுனியா பல்கலைக்கழகம் அடங்கலாக வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடத்தும் சர்வதேச ஆய்வு மாநாடு 'தமிழரின் கலையும் கலாசாரமும்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது என கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச ஆய்வு மாநாடு தொடர்பான ஊடக சந்திப்பு சனிக்கிழமை(08), கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், மாநாட்டு இணைப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் சி.சந்திரசேகரம், பாண்டிச்சேரி பல்கலைக்கழக சர்வதேச கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் குமரேசன் ராஜா ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

ஊடக சந்திப்பில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், மாநாட்டு இணைப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் சி.சந்திரசேகரம் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதில், வவுனியா பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை வேலூர் தொழில்நுட்ப கல்லூரி ஆகியவற்றோடு இணைந்து கிழக்குப் பல்கலைக்கழகமானது ஆய்வு மாநாடு நடத்தவுள்ளது.

இம்மாநாட்டின் முக்கிய தொனிப் பொருளாக கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் இருக்கின்ற எமது தமிழர்களின் பண்பாடுகளையும் கலை உணர்வுகளையும் வெளியுலகிற்குக் கொண்டு செல்வதற்கான ஒரு மேடையாக இந்த மாநாடு அமையும். தமிழர்களுடைய நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் உருவாக்கிய கலை சிற்பங்கள், நடனம் மற்றும் அதன் கலை நுட்பங்கள் கலாசார ரீதியாக எவ்வாறு ஆய்வாளர்கள் மத்தியில் சாத்தியமானது என்பது தொடர்பில் இந்த ஆய்வு மாநாடு முன்னிலைப்படுத்தப்படுகின்றது என்றுள்ளனர்.

# சாரதியின் சாமர்த்தியத்தால் விபத்து தவிர்க்கப்பட்டது

## ஐவருக்கு காயம்; வேனுக்கு சேதம்



திகன- கெங்கல்ல வீதியில் காணி ஒன்றில் அழுகிய புளியமரம் ஒன்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வேன் மீது விழுந்து விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியிலுள்ள மரம் திடீரென முறிந்து வீழ்ந்ததைக் கண்ட வேன் சாரதி, விபத்தைத் தவிர்க்க முயன்றுள்ளார்.

எனினும், வேனை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் மதில் மற்றும் தொலைபேசிக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக தெல்தெனிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை (10) இடம்பெற்றுள்ளதுடன், வேனின் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனத்தில் பயணித்த இரண்டு பெண் ஆசிரியர்கள் மற்றும் பல பாடசாலை மாணவர்கள் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அழுகிய புளியமரத்தை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் காணியின் உரிமையாளருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அறிவித்தும் பலனில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

நிதர்ஷன் வினோத்



ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன், வடமராட்சி-வல்லிபுரம் காட்டுப் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கரவெட்டி யாக்கரு விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்திதுறை, வல்லிபுரம் காட்டு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 02 சாக்குகளில் அடைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான 60 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சாவும் கைது செய்யப்பட்டவரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

நீலமேகம் பிரசாந்த்



திம்புள்ளை-பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பெட்ரோல் நிரப்பும் நிலையத்துக்கு அருகாமையில் வைத்து ஹெரோய்னுடன் ஒருவர், திம்புள்ளை-பத்தனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 300 மில்லி கிராம் ஹெரோய்ன் மற்றும் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திம்புள்ளை-பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போதை மாத்திரைகளுடன் நால்வர் கைது

நிதர்ஷன் வினோத்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரை மற்றும் வாளொன்றுடன் 4 பேர் யாழ். விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் ஞாயிற்றுக்கிழமை (09 ) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 24 ,25 வயதுக்குட்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள், மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# கௌரவிக்கும் நிகழ்வு

ஏ.எம்.ஜலீல்

மாத்தளையில் நடைபெற்ற தேசிய வெசாக் தினத்தையொட்டி, மும்மதங்களைச் சேர்ந்த மாணவர் மாணவியர்கள் 100 பேருக்கு சுமார் மூன்று இலட்சம் பெறுமதியில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, மாத்தளை ஆமினா தேசிய மகளிர் பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெறவுள்ளது.

மாத்தளை மஸ்ஜிதுகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சம்மேளன தலைவர் தேசபந்து எம். முஹ்த்தார் தலைமையில் முக்கிய உறுப்பினர்கள், பிரமுகர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# கசிப்புடன் முன்னாள் எம்.பி. கைது



கண்டி- ஹதரலியத்த, தும்பனே பிரதேச சபையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், இரண்டு கசிப்பு போத்தல்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டிற்கு அருகில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நபர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு அறிவுறுத்தப்பட்டு விடுக்கப்பட்ட நபராவார். .

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹதரலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபரை கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்தாகவும் கூறியுள்ளனர்.

# கவனஈர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு

எஸ்.அஷ்ரப்கான்

வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால், ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கக் கூட்டணி போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஏ.ஆதம்பாவா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எழுத்து மூலம் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்த




சுபோதினி அறிக்கையின் மூன்றிலிரண்டு பகுதி சம்பள முரண்பாட்டுத் தீர்வின்படி, இன்னும் இரண்டு பகுதி வழங்கப்படாமையை சுட்டிக்காட்டி அதனை பெறுவதற்காக பல்வேறு பேச்சுவார்த்தைகள் செய்தும் பலனில்லாத நிலையில், இப்போராட்டம் நடத்தவுள்ளது என்றும் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது அல்-கமரூன் வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(09) மாலை இடம்பெற்றது.

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2024 மார்ச் மாதம் 06 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:**
ஏ டீ எஸ் கன்சல்டன்டஸ் (பிரைவேட்) லிமிடெட்

**கம்பனியின் புதிய பெயர்:**
எம்ஜசீடி எஸோஸியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

**பதிவு செய்யப்பட்ட இலக்கம்:** பி வி 15117

**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:**
இல. 56, பூஜ்ய ஸ்ரீ தம்மாரத்ன மாவத்தை, மாதிவெல, கோட்டே

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**

# ‘பெரியண்ணா’வின் பதவியேற்புடன் வீரிட்டு அழும் குழந்தை

பிரதான தேர்தல்களுக்கான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னரே, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லும் பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகள், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில், ஏதாவதொன்றை கூறிவிட்டு வந்துவிடுவர். இது மீண்டும் பொதுவெளிக்கு வந்துவிடும்,

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் ஆதரவாகவும், தென்னிலங்கையைச் சேர்ந்த இனவாதிகள் எதிராகவும் குரல் கொடுப்பர், குறிப்பிட்ட காலத்துக்கு அது பேசும் பொருளாகவே இருக்கும் இறுதியில் ஒன்றுமே நடந்தபாடாக இருக்காது.

இந்தியத் தேர்தலில் வெற்றியீட்டிய நரேந்திர மோடி, மீண்டுமொருதடவை பிரதமராகப் பதவியேற்கும் வைபவம், ராஷ்டிரபதி பவனில் ஞாயிற்றுக்கிழமை(09) நடைபெற்றது. நரேந்திர மோடி, மூன்றாவது தடவையாகவும் பிரதமராகப் பதவியேற்ற வைபவத்தில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்றிருந்தார்.

நமது நாட்டை பொறுத்தவரையில், முன்னதாக ஜனாதிபதித் தேர்தலும், அதன் பின்னர் பாராளுமன்ற தேர்தலும் நடைபெறவேண்டும். எனினும், தேர்தல்களை நடத்தாமல், பாராளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றித் தேர்தல்களை ஒத்திவைக்கும் சூழ்ச்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் எழும்புகின்றன.

ஆனால், தேர்தல்கள் உரிய காலங்களில் நடத்தப்படவேண்டும் என்பது அரசியலமைப்பின் சட்டத்தில் உள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைத்ததைப் போல, ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களை ஒத்திவைக்கமுடியாது. எனினும், வடக்குக்கு அதுவும், நரேந்திர மோடி மற்றுமொரு தடவை பிரதமராகப் பதவியேற்ற நாளன்று சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை தன்னுடைய ஆட்சியில் அமுல்படுத்துவேன் என சூளுரைத்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கும் இடையில் 1987 ஜூலை 29ஆம் திகதி, ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் பிரகாரமே அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு ‘பெரியண்ணா’ உறவாகும். பெரியண்ணாவின் குழந்தையைப் பிக்குகள் தீயிட்டுக் கொளுத்திய சம்பவங்கள் இடம்பெறாமல் இல்லை. இந்நிலையில்தான், சஜித் பிரேமதாச, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில், வடக்கில் வைத்து உறுதிமொழியை அளித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையான அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கான அழுத்தத்தை இந்தியா, இலங்கைக்கு கொடுக்கவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலியுறுத்தல். எனினும், 13இன் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணம், வடக்கு, கிழக்காக, உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிரிக்கப்பட்டபோது, ‘பெரியண்ணா’ பேசாமலே இருந்துவிட்டார்.

13ஆவது திருத்தம் அல்ல, 13 பிளஸ் தருவோமென, வாக்குறுதி வழங்கியதன் பின்னர், அவையெல்லாம் புஷ்வாணமாகிவிட்டது. ‘பெரியண்ணா’வின் பதவியேற்புடன் அவரது குழந்தையான 13ஆவது திருத்தமும் பொதுவெளியில் பேசும் பொருளாகிவிட்டது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அராஜகம், சண்டித்தனம் செய்வது தங்கள் பொழுதுபோக்கு எனச் செய்யும் கூட்டம் வளர்ந்து பெருகிக்கொண்டே வருகின்றது.

யாரோ, எவரோ வீதியில் வாக்குவாதம் செய்தால், அதை ஊதிப்பெருக்க என ஒரு பெரும் கூட்டம், சண்டியர் கூட்டம், சொல்லிவைப்பது போல் வந்துவிடுகின்றது. இவை எல்லாமே இப்போது சாதாரண நிகழ்வாக மாறிவிட்டன.

கூட்டம் சேரச்சேர அங்கு வரும் சனங்களின் பணம், நகைகளைச் சூட்சுமமாகக் கொள்ளையடித்து விடுவது, அடிக்கடி திட்டமிட்டு நடக்கின்றது. மானுடம் மரித்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

இந்தச் செயல்கள் தொடர்ந்தால், பாதுகாப்பு மக்களுக்கு எப்படிக் கிடைக்கப் போகின்றது? பொலிஸார் உறக்கத்தில்!

குற்றம் புரிவதையே தொழில் எனச் செய்தால், இத்தகைய குற்றச் செயல்களை அடக்கி ஒடுக்குவது யார்? பொலிஸார் என்ன செய்கின்றார்கள்? கண்முன்னே நடக்கும் கோர நிகழ்வுகளை ரசித்துக் கொள்வதும் அதனுடன் இணைவதும் நாட்டின் சாபக்கேடு. அமைதி வேண்டும் என்கின்றோம். ஆனால், அது எங்கே?

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## பர்தா அணிந்த பரீட்சார்த்திகள்

# முகங்கொடுத்துள்ள பிரச்சினை

மொஹமட் பாதுஷா

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அளவில் பேசப்படுகின்றது, ஆனால், இன்னும் உள்நாட்டில் பல காரண காரியங்களின் அடிப்படையில் சிறியதும் பெரியதுமான உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதையே காண்கின்றோம்.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற அடிப்படை ஏற்பாடுகளை அரச கட்டமைப்பு சரியான முறையில் அமுல்படுத்தவில்லை என்பதையும், பிற மதங்கள், இனக் குழுமங்களைச் சேந்த மக்களின் உரிமைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத்தன்மையும் புரிதலும் சகோதர இன மக்களுக்கு அவசியம் என்பதையும் சில சம்பவங்கள் இன்னும் உணர்த்திக் கொண்டே இருக்கின்றன.

திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி மண்டபத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய சாஹிரா கல்லூரியைச் சேர்ந்த 70 முஸ்லிம் மாணவிகளின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது பாராளுமன்றத்தில் மட்டுமன்றி, சமூக மட்டத்தில் பேசப்படுகின்ற ஒரு விவகாரமாக மாறியிருக்கின்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் கேள்வி எழுப்பியதையடுத்து, இப் பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இன்னும் பெறுபேறுகள் விடுவிக்கப்படவில்லை.

இதேவேளை, அதிபர் சேவை பரீட்சைக்குத் தோற்றிய 13 முஸ்லிம் பரீட்சார்த்திகளும் இதே பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். அவர்களது பெறுபேறுகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கே ஒருவித மன உலைசலை ஏற்படுத்தியுள்ளது என்றுதான் கூற வேண்டும்.

இலங்கையில் சட்டங்கள் அனைத்துமே எல்லோருக்கும் பொதுவானவை. இதனை எல்லா இனங்கள், மதங்களைச் சேர்ந்த மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லிம் சமூகம் ஓர் அரபு நாட்டில் வாழ்வது போல இலங்கை போன்ற பல்லின நாடுகளில் வாழ இயலாது.

அந்த வகையில், ஒரு குறிப்பிட்ட பரீட்சைக்கு, போட்டிக்கு, நிகழ்வுக்கு என்று ஒரு விதிமுறை உள்ளது. இதனைப் பின்பற்றியே ஆக வேண்டும். ஒரு தனிமனித உரிமை பாதிக்கப்படாத விடத்து, பொதுவான சட்ட நடைமுறைகளுக்குள் தமது கலாசாரம் அல்லது உணர்வு சார்ந்த விடயங்களைத் திணிக்க முற்படுவது கூடாது என்பது பொதுவாக அனைத்து இன மக்களுக்குமான அறிவுரையாகும்.

சமகாலத்தில், இலங்கையின் அரசியலமைப்பினாலும் இன்னபிற சட்ட ஏற்பாடுகளாலும் ஏராளமான தனிமனித உரிமைகள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் யாராக இருந்தாலும், முதலில் அதனை நேரிய மனதுடன் விளங்கிச் செயற்பட வேண்டிய தேவை இன்னும் இருக்கின்றது என்பதையே தொடரும் விரும்பத்தகாத சம்பவங்கள் எடுத்தியம்புகின்றன.

2024 ஜனவரியில் இடம்பெற்ற (2023ற்கான) உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தோற்றினார்கள். அவர்களுள் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மாணவிகளும் உள்ளடங்குவர். ஆனால், திருகோணமலையில் பரீட்சை எழுதிய 70 மாணவிகளின் பெறுபேறுகள் மட்டும்தான் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பர்தா இன்று பெரும்பாலான முஸ்லிம் மாணவிகள் அணிகின்ற ஆடையாக இருக்கின்றது. இந்நிலையில், இலங்கையில் முஸ்லிம் மாணவிகள் திருகோணமலையில் மட்டும் பரீட்சைக்குத் தோற்றவில்லை. வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் காலி, மாத்தறையிலும் கூட பரீட்சைக்குத் தோற்றினார்கள். எல்லாப் பிரதேசங்களிலும் வாழும் முஸ்லிம் பாடசாலை மாணவிகள் அணிகின்ற பர்தாக்கள் கிட்டத்தட்ட ஒரே விதமானவை. அதேவேளை, சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்குச் செல்லும் முஸ்லிம் மாணவிகள் சில வரன்முறைகளைக் கொண்ட பர்தா அணிந்து தலையையும் உடம்பின் மேற்பகுதியையும் மூடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இந்நிலையில், காதுகளை மறைக்கும் விதத்தில் பர்தா அணிந்து வந்தார்கள் என்ற காரணத்திற்காகவே, திருகோணமலையிலுள்ள வேறு ஒரு பாடசாலையில், பரீட்சை எழுதிய சாஹிரா கல்லூரியைச் சேர்ந்த முஸ்லிம் மாணவிகள் 70 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளின் தரப்பில் கூறப்படுகின்றது.

பரீட்சார்த்தி என்ற வகையில் மாணவிகள் விதிமுறைகளைப் பேணுவது கட்டாயமாகும். ஒரு பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம் உறுதி செய்யப்பட்டதன் பின்னரே அவரை பரீட்சை மண்டபத்திற்குப் பரீட்சை எழுத அனுமதிக்க முடியும். ஆள்மாறாட்டம் உட்பட பரீட்சை ஒழுங்கு விதிகளை மீறுகின்றவர்களை பொலிஸில் ஒப்படைக்கக் கூட ஏற்பாடு உள்ளது.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முகத்திற்கு மேலதிகமாக காதுகள் முக்கியமானவை. அத்துடன், நவீன இலத்திரனியல் கருவிகளைக் காதுகளுக்குள் சொருகிப் பயன்படுத்தலாம் என்ற விடயமும் கருத்திற் கொள்ளப்படுவதுண்டு.

எனவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தின் படி தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் காதுகளுடனான முகத்தை முஸ்லிம் பெண்கள் காண்பிக்க முன்வர வேண்டும். முஸ்லிம் மாணவிகள் மட்டுமன்றி, ஏனைய முஸ்லிம் பெண்களுக்கும் சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற அறிவுரை ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றது

இவ்வாறான பின்னணியிலேயே காதுகளை மூடிய பர்தா அணிந்து வந்தார்கள் அதனால், ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியது என்று கூறி திருகோணமலையில் 70 மாணவிகளது பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேல் மாகாணத்தின் 13 ஆசிரிய பரீட்சார்த்திகளது நிலையும் இதுதான். இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

திருகோணமலை மாணவர்கள் முகத்தை முற்றாக மூடிய ஆடை அணிந்ததாகக் கூறப்படவில்லை. அத்துடன், இவர்கள் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்படியென்றால் அவர்களது ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றுதானே அர்த்தம்?

தமது அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் மாணவிகள் விடாப்பிடியாக இருந்திருப்பார்கள் என்றால், அல்லது ஆளடையாளம் மேற்பார்வையாளர்களுக்குத் திருப்தியில்லை என்றால், அவர்கள் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டிருக்க முடியாது. ஆனால், பரீட்சைக்குத் தோற்ற அனுமதித்த பிறகு, இப்போது பெறுபேறுகளை நிறுத்தி வைப்பதன் நியாயம் என்னவோ?

இந்த மாணவிகள் ஏதோ ஒருவகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியிருந்தால், அது பரீட்சை விதிமுறைகளின் மீறலாகும். இதனை மதத்தையோ கலாசாரத்தையோ காரணம் காட்டி சரி என வாதிட முடியாது. மறுபுறத்தில், அவர்கள் அடையாளத்தை வெளிப்படுத்திய பின்னரும் பரீட்சை பெறுபேறுகள் நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் அது அவர்களது உரிமை மீறலாகவே அமையும்.

திருகோணமலையில் ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் மட்டும் முஸ்லிம் மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களிலும் கொழும்பிலும் காலியிலும் கண்டியிலும் மாத்தறையிலும் யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம் மாணவிகள் வழக்கம்போல தோற்றியுள்ளார்கள்.

அதேபோல், மேற்குறிப்பிட்ட பரீட்சை நிலையத்தில் உள்ள மாணவிகள் மட்டும் பர்தா அணிந்து பரீட்சைக்குச் சென்றதாகக் கூறவும் இயலாது. நாட்டின் எல்லா இடங்களிலும் முஸ்லிம் மாணவிகள் கிட்டத்தட்ட ஒரே வடிவிலான பர்தாவை அணிவதே வழக்கமாக உள்ளது. ஆனால், அங்கெல்லாம் இப்படியான சர்ச்சைகள் ஏற்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை.

அப்படியென்றால், திருகோணமலை மாணவிகள் விசேட வடிவிலான பர்தா அணிந்து வந்திருக்க வேண்டும் அல்லது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் காதுகளைக் காண்பிக்காமல் மேற்பார்வையாளர்களுடன் வாக்குவாதம் புரிந்து, ஒழுங்கு விதிகளை மீறியிருக்க வேண்டும்.

உண்மையில், பரீட்சை மண்டபத்தில் என்ன நடந்தது என்ற உண்மை நிலைவரம் நமக்குத் தெரியாது. ஆயினும், இது தொடர்பில் கடந்த நான்கு மாதங்களில் கல்வியமைச்சு தெளிவான விசாரணை ஒன்றை நடத்தி, அதன்படி பெறுபேறுகளை வெளியிட்டிருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு பூதாகரமாக மாறி இருக்காது.

எனவேதான், இதற்குப் பின்னால் வேறு காரணங்கள், இனப் பாகுபாடு சார்ந்த நோக்கங்கள் உள்ளனவா என்ற சந்தேகம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே, திருமலையில் கலாசார ஆடை அணிந்த ஆசிரியர் ஒருவர் தமிழ் பாடசாலை ஒன்றில் பணி புரிவதைத் தடுக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. தாடி வைத்த ஒரு மாணவனின் உரிமை பல்கலைக்கழகத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இப்போது மீண்டும் திருகோணமலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் எந்தப் பாகங்களிலும் இப்படியான ஒரு சிக்கலை முஸ்லிம்கள் எதிர்கொண்டிராத நிலையில் கிழக்கில் குறிப்பாகத் திருகோணமலையில் மட்டும் இப்படியான வேண்டத்தகாத நிகழ்வுகள் இடம்பெறுவது கவனிப்பிற்குரியது.

கிழக்கு மாகாண அரச நிர்வாகமும் ஆளுநரின் நடவடிக்கைகளும் முஸ்லிம்களை வித்தியாசமாகக் கையாள்வதாக ஏற்கெனவே விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், இந்த சம்பவமானது, கல்வித்துறையிலும் பாகுபாடும் சகிப்புத்தன்மையின்மையும், புகுந்து விட்டதான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, இந்த விவகாரத்திற்கு உடன் தீர்வு கண்டு பெறுபேறுகளை வெளியிடுவது மட்டுமன்றி, இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அது எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும்.

## கடிதங்கள்

### நெருக்கடியில் மாணவர்கள்

கிளிநொச்சி மேற்கில் உள்ள மூன்று முக்கிய பாடசாலைகளில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவு பாடங்களுக்கு ஆசிரியர்கள் பணியில் இல்லாததன் காரணமாக இப்பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கிளிநொச்சி நகரத்திற்கு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பிரிவுகள் உயர்தரத்தில் உள்ளன. ஆனால், முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக மாணவர்கள் கற்க முடியாத நிலைமை இருப்பதன் காரணமாக கிளிநொச்சி நகரத்திற்கு செல்ல வேண்டியுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் வலயக் கல்விப் பணிமனைக்கு சென்று ஆசிரியர்களை நியமியுங்கள் என கோரிக்கைகள் விடுத்த போதும் விரைவாக ஆசிரியர்களை நியமிப்போம் என வாக்குறுதிகள் வழங்கிய அதிகாரிகள் இதுவரை ஆசிரியர்களை நியமிக்காததன் காரணமாக கிளிநொச்சி நகரத்திற்கு மாணவர்கள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கும் இப்பாடசாலைகளின் நிலைமை தெரியும்.

மேலும், கடந்த காலங்களில் இப்பாடசாலைகளில் கணித, விஞ்ஞான துறைகளில் மாணவர்கள் பெரும் சாதனைகளை கல்வியில் வெளிப்படுத்திய போதிலும் தற்போது ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக மாணவர்கள் கற்றலில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்


சத்தியமூர்த்தி


ஜெயா

# ‘பல்கலை’ குடும்பம்

பல்கலைக்கழகத்தில் பல்வேறு பாடப்பிரிவுகளைக் கொண்ட பல துறைகள் இருக்கும். ஒவ்வொரு துறையும் அந்தப் பாடம் தொடர்பான அறிவுக் கருவூலமாக விளங்கி மாணவர்களுக்குப் பயன் தரும். அது போலவே நல்ல குடும்பத்திலும் தந்தை, தாய், கணவன், மனைவி, குழந்தைகள் என்று பலர் இருப்பார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கடமையைச் சரியாகச் செய்தால் அன்பும் அறிவும் அந்த வீட்டில் நிலைத்து இருக்கும். குடும்பத்தில் உள்ள எல்லோரும் நல்லவர்களாக இருந்தால் அந்தக் குடும்பம் நல்ல குடும்பமாக இருக்கும் அதனால்தான் ‘நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்’

இந்த குடும்ப பல்கலைக்கழகம், ஒவ்வொரு குடும்பத்துக்கு இலகுவில் கிடைத்துவிடாது. விரல்விட்டு எண்ணக்கூடிய, அதாவது கடுமையான முயற்சிக்குப் பின்னர், புறமுதுகில் கேலி, கிண்டல், பொறாமை உள்ளிட்டவற்றை பேசுபவர்களுக்கு மத்தியில், அவற்றையெல்லாம் கண்டும் காணாதது போல சென்று விட்டால், ஒவ்வொரு குடும்பங்களும் உயர்வானதாய் இருக்கும்.

அப்படிப்பட்ட குடும்பங்களில் மலையகத்தில் மிகச் சிறந்த குடும்பங்களில் ஒன்றாக, சத்தியமூர்த்தி ஜெயா குடும்பத்தை இந்த நூற்றாண்டில் முன்னுதாரணமாகக் கூறலாம்.

பொகவந்தலாவை எல்படை மேற்பிரிவைச் சேர்ந்த சிவனு அழகம்மா தம்பதியின் கடைக்குட்டியான சிவனு சத்தியமூர்த்தி ஒரு முதுநிலை வணிக நிர்வாக பிரிவில் (MBA) சிறப்பு பொது மேலாண்மை MBA (Sp) Hons (General Management) பட்டம் பெற்ற முதலாவது பட்டதாரி என்ற பெருமையைத் தனதாக்கிக்கொண்டவர் ஆவார்.

அவருடைய துணைவியான நோர்வூட் சென்ஜோன்டிலரியைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயாவும் ஒரு பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர், அவர் தன்னுடைய அயராத முயற்சியினால், தான் கற்பித்த பாடசாலைகளில் இருந்து பெரும்பாலானவர்களை உருவாக்கியிருக்கின்றார்.

ஒரு கையில் ஐந்து விரல்கள் இருப்பதைப்போல சத்தியமூர்த்தி ஜெயா தம்பதிகளின் ஐந்து பிள்ளைகளையும் ஐந்து முத்துகள் என்றுதான் கூறவேண்டும். படிப்பில் மட்டுமன்றி, ஏனைய துறைகளிலும் தங்களுடைய திறமைகளை காண்பித்துள்ளனர்.

தாங்களும் கற்றுக்கொண்டு தங்களுடைய ஐந்து பிள்ளைகளில் மூவரை பட்டதாரிகளாக்கியுள்ளனர். இன்னுமிருவரும் பட்டதாரிகளாகி விடுவர் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அதில், சத்தியமூர்த்தி சத்தியபிரதாப் யாழ்ப்பாண மருத்துவ பீடத்திலும் சத்தியமூர்த்தி சத்தியபிரியங்கா கொழும்பு தொழில்நுட்ப பீடத்திலும் உள்வாரி பட்டதாரியாக்கியுள்ளனர்.


மனித வள மேலாண்மையில் டிப்ளமோ மற்றும் வணிக மேலாண்மையில் டிப்ளோமா ஆகிய பட்டங்களை வெளிவாரியாக பெற்றுக்கொண்ட சத்தியமூர்த்தி சத்தியபிரதீப், பெருந்தோட்ட துறைக்குள் காலடி எடுத்து வைத்து தோட்ட உதவி அதிகாரியாக பணியாற்றி வருகின்றார்.

நான்காவது பிள்ளையான சத்தியமூர்த்தி சத்தியபிரஷாலினி அண்மையில் வெளியான க.பொ.த உயர் தர பரீட்சையில், மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்று நுவரெலியா மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று அகில இலங்கை ரீதியில் 54ஆவது இடத்தை பெற்றதன் மூலம் தகுதி சித்தி (Merit Pass) பெற்று சட்டம் கற்பதற்கு கொழும்பு சட்ட பீடத்திற்கு தெரிவாக உள்ளார்.

தந்தையைப் போலவே கடைகுட்டியான சத்தியமூர்த்தி சத்தியபிரவீன் அண்மையில் நிறைவடைந்த கல்விப்பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிவிட்டு, பெறுபேறு வரும் வரையில் காத்திருக்காது உயர்தரத்தில் கணித பிரிவை தேர்ந்தெடுத்து கற்றுக்கொண்டிருக்கின்றார். வானூர்தி பொறியியளாளர் என்ற கனவை நோக்கியே பயணிக்க காலடி எடுத்துவைத்துள்ளார்.


இவர்களது குடும்பத்தில் ஒரே கூரையின் கீழ் நிர்வாக அதிகாரி, அரசாங்க ஆசிரியர், வைத்தியர், தோட்ட உதவி அதிகாரி, உதவி ஆய்வாளர் என அனைத்து துறைகளும் உள்ளடக்கி இருப்பதோடு இவர்களோடு சட்டத்தரணி மற்றும் வானூர்தி பொறியியளாளர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.


‘நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்’ என்பதற்கு இக்குடும்பம் சிறந்த உதாரணமாகும்.


சத்தியபிரதாப்


சத்தியபிரதீப்


சத்தியபிரியங்கா


சத்தியபிரஷாலினி


சத்தியபிரவீன்

# ‘காஞ்சனா 4’ படத்தில் பிரபல நடிகை?



ராகவா லோரன்ஸ் நடித்து இயக்கிய ‘காஞ்சனா’ திரைப்படத்தின் 4ஆம் பாகம் விரைவில் உருவாகவுள்ளது. இந்த படத்தில் பிரபல நடிகையை ராகவா லோரன்ஸ் ஒப்பந்தம் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

‘காஞ்சனா’ படத்தின் முதல் பாகத்தில் ராய் லட்சுமி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்த நிலையில், இரண்டாம் பாகத்தில் டாப்ஸி மற்றும் நித்யா மேனன் ஆகிய இரண்டு நடிகைகள் நடித்திருந்தனர்.

இதனையடுத்து, ‘காஞ்சனா’ மூன்றாம் பாகத்தில் ஒவியா, வேதிகா முக்கிய வேடத்தில் நடித்திருந்த நிலையில், தற்போது 4ஆம் பாகத்தில் நடிகை மிருணாள் தாகூர் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர் கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான ‘சீதாராமம்’என்ற சூப்பர் ஹிட் படத்தில் நடித்திருந்தார்.

அதன் பிறகு விஜய் தேவரகண்டாவின் ’ஃபேமிலி ஸ்டார்’ படத்தில் நடித்தார்.

இந்த நிலையில் ‘காஞ்சனா 4’ படத்தின் படப்பிடிப்பு வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாக இருப்பதாகவும் அடுத்த ஆண்டு ஏப்ரல் விடுமுறையில் இந்தப் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# பயமுறுத்தும் பருவு



நடிகை நிவேதா பெத்துராஜ் நடித்து வரும் ‘பருவு’ என்ற வெப் தொடரின் டிரைலர் வெளியாகி தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளில் வெளியாக இருக்கும் ‘பருவு’ தொடரின் டிரைலரை பார்க்கும் போது ஜாதி மாறி திருமணம் செய்து கொண்ட ஜோடியைப் பழி வாங்கும் ஒரு குரூப்பின் செயல் என்பது தெரிய வருகிறது.

சாதி பிரச்சனை, ஆணவக் கொலை ஆகியவற்றை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த வெப் தொடர் நிவேதா பெத்துராஜுக்கு வெற்றியைக் கொடுக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். ‘பருவு’ வெப் தொடர் ஜூன் 14ஆம் திகதி வெளியாக உள்ளது.

நரேஷ், நிவேதா பெத்துராஜ், நாகபாபு, ரமேஷ், ப்ரணிதா, உள்ளிட்ட பலர் நடித்த இந்த வெப்தொடரை சித்தார்த் நாயுடு மற்றும் ராஜசேகர் இயக்கியுள்ளனர். ஷரவன் பரத்வாஸ் இசையில் இந்த தொடர் உருவாகியுள்ளது.




## மோடி பதவியேற்பு தினத்தில் பதவியேற்ற கவுண்டமணி

பிரதமராக மோடி மூன்றாவது முறையாக பதவியேற்ற நிலையில், கவுண்டமணி நடித்த ‘ஒத்த ஓட்டு முத்தையா’ என்ற திரைப்படத்தின் போஸ்டர் வெளியாகி வைரலாகியுள்ளது.

தமிழ் திரையுலகின் கொமெடி நடிகராக இருந்த கவுண்டமணி நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஹீரோவாக நடித்துள்ள திரைப்படம் ‘ஒத்த ஓட்டு முத்தையா’. அதில் அரசியல்வாதியாக நடித்திருக்கும் கவுண்டமணி தேசியக் கொடியை தனது சட்டையில் குத்தியுள்ள நிலையை அவருக்கு பின்னால் பதவி ஏற்பு விழா என்ற பேனர் காணப்படுகிறது.




## ‘கில்லி’ யை தொட முடியாத ‘இந்தியன்’

அண்மைய காலமாகப் பழைய சூப்பர் ஹிட்டான திரைப்படங்கள் மீண்டும் வெளியிடப்பட்டு வரும் நிலையில், அவற்றில் ‘கில்லி’ மட்டுமே வசூல் சாதனை செய்துள்ளது. இந்த படம் முதல் நாளில் 10 கோடி ரூபாய் வசூல் செய்தது.

இந்த நிலையில் ‘இந்தியன்’ படம் கடந்த வெள்ளிக்கிழமை ரீ-ரிலீஸ் ஆகி முதல் நாளில் ஒரு கோடி மட்டுமே ரிலீஸ் வசூல் செய்துள்ளதாகவும் ‘கில்லி’ படத்தின் முதல் நாள் வசூலில் 10இல் ஒரு பங்கு தான் வசூல் செய்துள்ளதாகவும் தெரிகிறது.

கமல்ஹாசன், ரஜினிகாந்த், அஜித் உட்பட பலர் பழைய சூப்பர் ஹிட் படங்கள் ரிலீஸானாலும் கூட ‘கில்லி’ படத்தின் வசூலை தொட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# நிச்சயதார்த்தம் நடந்தது நிஜம்

தனக்கு நிச்சயதார்த்தம் நடந்தது உண்மை என நடிகை சுனேனா கூறியுள்ளார்.

நடிகர் நகுலுக்கு ஜோடியாகக் காதலில் விழுந்தேன் படத்தில் அறிமுகமானவர் சுனேனா. தொடர்ந்து மாசிலாமணி, திருத்தணி, வம்சம், நீர்ப்பறவை, தெறி உட்பட பல படங்களில் நடித்தார்.

கடைசியாக இன்ஸ்பெக்டர் ரிஷி என்ற வெப் சீரிஸில் நடித்திருந்தார். இந்நிலையில், ஆண் ஒருவரின் கையை பிடித்தபடி சுனேனா அமர்ந்திருக்கும் புகைப்படத்தைத் தனது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டார்.

இதையடுத்து, சுனேனாவுக்கு திருமணம் என்ற தகவல் பரவியது. புகைப்படம் வெளியிட்டு 2 நாட்கள் அமைதியாக இருந்த சுனேனா, இது பற்றி இப்போது இன்ஸ்டாகிராமிலே பதில் சொல்லியிருக்கிறார்.

‘நான் போட்ட பதிவால் பல்வேறு ஊகங்கள் கிளப்பப்படுகின்றன. அதற்காக நானாகவே நடந்ததைச் சொல்லி விடுகிறேன். எனக்கு நிச்சயதார்த்தம் முடிந்துள்ளது’ என்றார். எனினும், அவரது வருங்கால கணவர் யார் என்பதை சுனேனா கூறவில்லை.

புதுடெல்லி

விவசாயிகளுக்கான நிதியில்

# பிரதமரின் முதல் கையொப்பம்



மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றுக் கொண்ட நரேந்திர மோடி, திங்கட்கிழமை(10) தனது அலுவலகத்தில் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டம் தொடர்பான கோப்பில் தனது முதல் கையொப்பத்தை இட்டுள்ளார். 9.3 கோடி விவசாயிகள் பயன் அடையும் வகையில் ரூ.20,000 கோடி விடுவிக்கும் கோப்பில் பிரதமர் மோடி கையெழுத்திட்டார்.

ஞாயிற்றுக்கிழமை(09) அன்று, அவருக்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தேர்தலில் 240 இடங்களில் வென்ற பாஜக, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் இந்த முறை ஆட்சி அமைத்து உள்ள நிலையில், மொத்தம் 72 பேர் அன்றைய தினம் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பிரதமர் மோடி நேற்று தனது அலுவலகத்துக்கு சென்றதும் 'பி.எம் கிசான் நிதி' எனப்படும் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டத்தில் முதலாவதாக கையொப்பமிட்டுள்ளார்.

மேலும், "இதன் மூலம் மொத்தம் 9.3 கோடி விவசாயிகள் பயன் அடைவார்கள். ரூ.20,000 கோடி இதில் விநியோகம் செய்யப்படும். வேளாண் மக்களின் நலனுக்காக எங்களது அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்படும். அந்த வகையில் அது சார்ந்த கோப்பில் முதல் கையெழுத்திடுவது தான் சரியாக இருக்கும். வரும் நாட்களில் வேளாண் மக்களுக்காகவும், வேளாண் துறை சார்ந்தும் கூடுதலாக பணியாற்ற உள்ளோம்" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருவனந்தபுரம்:

# "ஒன்றிய அமைச்சராக தொடர்கிறேன்"



மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்ற நடிகரும், முன்னாள் ராஜ்யசபா உறுப்பினருமான சுரேஷ் கோபி கடந்த ஒன்றிய இணை அமைச்சராக பதவியேற்று கொண்டார்.

திருச்சூரில் வெற்றி பெற்றால் சுரேஷ் கோபிக்கு கேபினட் அந்தஸ்துடன் ஒன்றிய அமைச்சர் பதவி கிடைக்கும் என்று தேர்தலுக்கு முன்பே பேசப்பட்டது. எதிர்பார்த்ததை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதால் அவருக்கு கேபினட் அமைச்சர் பதவி உறுதி என்று கருதப்பட்டது.

இந்நிலையில், முக்கிய துறைகளுடன் கூடிய கேபினட் அந்தஸ்துடன் அமைச்சர் பதவி தனக்கு கிடைக்கும் என்று கருதி வந்த நிலையில், தற்போது இணை அமைச்சர் பதவி மட்டுமே கிடைத்துள்ளமை சுரேஷ் கோபிக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலக முடிவெடுத்துள்ளதாக கூறப்பட்டது. இது தொடர்பாக அவர் பதவியேற்றபின் டெல்லியில் பேட்டியும் அளித்துள்ளார்.

அதில், "நான் ஏற்கெனவே 4 படங்களில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளேன். அமைச்சர் பதவியை ஏற்றால் அந்தப் படங்களில் நடிக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் தயாரிப்பாளர்களுக்கும், அந்தப் படங்களில் பணிபுரிபவர்களுக்கும் பெரும் சிரமமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, தற்போது எனக்கு அமைச்சர் பதவி தேவையில்லை என்று நான் கட்சி மேலிடத்திடம் கூறியிருந்தேன்.

எனக்கு சினிமா தான் முக்கியமாகும். ஒன்றிய அமைச்சர் பதவி எனக்கு தேவை இல்லை. நான் எம்.பி. என்ற நிலையில், திருச்சூர் தொகுதி மக்களுக்காக சிறப்பான முறையில் பணிபுரிவேன். என்னுடைய நிலையை நான் மேலிடத்திடம் தெரிவித்து விட்டேன். இனி கட்சி தான் இதில் முடிவெடுக்க வேண்டும்" என்றார்.

அத்துடன், ஒன்றிய அமைச்சர் பதவியில் இருந்து விலக போவதாக ஊடகங்களில் வெளியான தகவல் பெய்யானது என பாஜக எம்.பி. சுரேஷ்கோபி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"பிரதமர் மோடி அமைச்சரவையில் பணியாற்றுவது தனக்கு கிடைத்த கவுரவம். பிரதமர் மோடி
தலைமையில் கேரள வளர்ச்சிக்கு பாடுபட உறுதியாக உள்ளேன். கேரள மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் தொடர்வது பெருமை அளிக்கிறது.

மோடி அமைச்சரவையில் மத்திய இணை அமைச்சராக தொடர்கிறேன்"
என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்

# தடையாக உள்ளார் இம்ரான்

## நவாஸ் ஷெரீப் குற்றச்சாட்டு



பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு இம்ரான் கான் பெரிய தடையாக இருப்பதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் குற்றம் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான இம்ரான் கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், பல வன்முறைகளுக்கு இடையே நடந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(என்) கட்சி மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சிகள் இணைந்து கூட்டணி அரசு அமைத்துள்ளன. இந்நிலையில், நவாஸ் ஷெரீப் கட்சி எம்.பிக்களை சந்தித்து பேசியுள்ளார். அதன் பின்னர் நவாஸ் கூறுகையில்,"அரசியல் பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைக்கு இம்ரான் கான், ஆர்வம் காட்டவில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இம்ரான் கான் பெரிய தடையாக உள்ளார். இதில் சம்மந்தப்பட்ட ஒரு தரப்பு ஆர்வம் காட்டாத போது பேச்சுவார்த்தை எப்படி வெற்றி பெறும். நட்புரீதியாக பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தயக்கம் காட்டுகிறார். இம்ரான் கான் வீடு அமைந்திருக்கும் பனிகாலா என்ற இடத்துக்கும் சென்று வந்தேன். எங்கள் நேர்மையை பலவீனமாக கருதுகின்றனர்" என்றார்.

சியோல்

வட கொரியாவுக்கு எதிராக

# ஒலிபெருக்கி பிரசாரம்

வட கொரியாவுக்கு எதிராக எல்லையில் ஒலிபெருக்கி பிரசாரம் மீண்டும் தொடங்கப்படும் என்று தென் கொரியா அறிவித்துள்ளது.

வட கொரியா அணு ஆயுதங்களை அடிக்கடி சோதனை நடத்தி வருவதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் ஏற்படுகிறது. இதை கண்டிக்கும் வகையில், வட கொரியாவுக்கு எதிரான பிரசுரங்கள் அடங்கிய பலூன்களை தென் கொரிய தன்னார்வலர்கள் கடந்த மாதம் வட கொரியாவுக்குள் அனுப்பினர்.

அதன் எதிரொலியாக வட கொரியா குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள் ஆகியவற்றை பைகளில் போட்டு இராட்சத பலூன்களில் தென் கொரியாவுக்கு அனுப்பியது. ஒரு சில நாட்களில் மட்டும் ஆயிரக்கணக்கான பலூன்களை வட கொரியா வீசியது.

இந்நிலையில், தென் கொரிய தேசிய பாதுகாப்பு இயக்குநர் தலைமையில் உயர் அதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில், வட கொரியாவுக்கு எதிராக எல்லையில் ஒலிபெருக்கி பிரசாரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இருபதுக்கு  20 உலகக் கிண்ணம்:




# பாகிஸ்தானை வென்றது இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற பாகிஸ்தான் உடனான குழு ஏ போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இந்தியா: 119/10 (19 ஓவ.)
(துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 42 (31), அக்ஸர் பட்டேல் 20 (18), றோஹித் ஷர்மா 13 (12), அர்ஷ்டீப் சிங் 09 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 3/21 [4], ஹரிஸ் றாஃப் 3/21 [4], மொஹமட் ஆமிர் 2/23 [4], ஷகீன் ஷா அஃப்ரிடி 1/29 [4], இமாட் வசீம் 0/17 [3], இஃப்திஹார் அஹ்மட் 0/7 [1])

பாகிஸ்தான்: 113/7 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 31 (44), இமாட் வசீம் 15 (23), பக்கர் ஸமன் 13 (08), பாபர் அஸாம் 13 (10), உஸ்மான் கான் 13 (15), நசீம் ஷா ஆ.இ 10 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 3/14 [4], ஹர்திக் பாண்டியா 2/24 [4], அக்ஸர் பட்டேல் 1/11 [2], அர்ஷ்டீப் சிங் 1/31 [4], மொஹமட் சிராஜ் 0/19 [4], இரவீந்திர ஜடேஜா 1/11 [2])

போட்டியின் நாயகன்: ஜஸ்பிரிட் பும்ரா


இதேவேளை, அன்டிகுவாவில் நடைபெற்ற ஓமானுடனான குழு பி போட்டியில் ஸ்கொட்லாந்து வென்றது.

இந்நிலையில், நியூ யோர்க்கில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் கனடாவை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளதுடன், லௌடர்ஹில்லில் புதன்கிழமை (12) அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் நேபாளத்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதுடன், அன்டிகுவாவில் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் நமீபியாவை அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.




# சமநிலையில் பிரான்ஸ்–கனடா போட்டி

பிரான்ஸில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற அவ்வணியுடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் கனடா சமப்படுத்தியது.




# கனேடிய குரான் பிறீ: வென்ற வெர்ஸ்டப்பன்


கனேடிய குரான் பிறீயானது ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற நிலையில் நடப்பு போர்மியுலா வண் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார். பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் வென்ற நிலையில், மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்கலரென் அணியின் லான்டோ நொரிஸ் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடிஸ் அணியின் ஜோர்ஜ் ரஸல் மூன்றாமிடத்தை பெற்றிருந்தார்.



# மியூனிச் செல்லும் சியெஸ்கா?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் கைச்சாத்திடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜுவென்டஸுடனான 26 வயதான சியெஸ்காவின் ஒப்பந்தமானது அடுத்த பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையில், 40 மில்லியன் யூரோக்களை அக்கழகம் கோருவதாகக் கூறப்படுகிறது.



பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்

# சம்பியனான அல்கரெஸ்

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் தற்போதைய இரண்டாம் நிலை வீரரான கார்லோஸ் அல்கரேஸ் சம்பியனானார்.

ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில் நான்காம் நிலை வீரரான அலெக்ஸான்டர் ஸவ்ரேவ்வை எதிர்கொண்ட ஸ்பெய்னின் அல்கரேஸ், 6-3, 2-6, 5-7, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 11 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.